Day Class
Physics: திரு. ச கதிர்வேல
Chemistry: திரு. மலர்
Zoology: திரு. நாகநாதன்
Botany: திரு குமாரதாஸ்
Pure & Applied Maths: திரு நவநீதா
New Master Institute
B.M.C. Lane. Jaffna.

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

நடைபெறுகிறது!
A/L 87 Day Class
பிரிவு II
8.00 - 9.00 PHYSICS
9.00 - 10.00 CHEMISTRY
10.00 - 11.00 ZOOLOGY
11.00 - 12.00 BOTANY
10.00 - 12.00 (PURE & APP MATHS
New Master Institute
B.M.C. Lane. Jaffna.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ புரட்டாதி மீ 27 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 8 (13-10-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-279

# நிறைமாதக் கர்ப்பிணியின் வயிற்றைப் பிளந்த ஷெல்

## அல்வாயில் நிகழ்ந்த அநியாயச் சாவு

-பருத்தித்துறை செய்தியாளர்:- பா. இ. நாதன்-

பருத்தித்துறை, அக். 13

சனிக்கிழமையன்று மாலை பருத்தித்துறை கடற்கரையோரத்தில் இருந்து கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதல்களினால் நிறைமாத இளம் கர்ப்பிணி ஒருவர் பலியானார்.

அல்வாய் தெற்கு பட்டியோடையைச் சேர்ந்த திருமதி செல்வநாயகம் நளினி (வயது 18) என்ற இளம்பெண்ணே வீட்டிலிருந்தபோது பீரங்கிக் குண்டுக்கு இரையானார்.

இவரது வயிற்றின் ஊடாக பீரங்கிக் குண்டுச் சிதறல்கள் சென்றதால் குடல் வெளியே வந்த நிலையில் வயிற்றில் வளர்ந்த சிசுவின் உறுப்புக்களும் வெளியே தெரிய அவர் விழுந்து கிடந்தார். உடனடியாக மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு அவர் எடுத்துச் செல்லப்பட்டார்.

அங்கு சுமார் 2 பைந்து இரத்தம் ஏற்றப்பட்டது. அவசர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டும் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

இவ் இளம் பெண் திருமணமாகி ஒரு வருடமே ஆகின்றது.

இச் சோக சம்பவத்தினால் அல்வாய் தெற்குக் கிராமமே சோகமயமாகக் காட்சியளிக்கின்றது. (உ-118)

### பருத்தித்துறையில் வர்ணக் கொடிகள்

பருத்தித்துறை, அக். 13

பருத்தித்துறை இராணுவ பொலீஸ் கூட்டு முகாம் பகுதியில் அடிக்கடிப் பல வர்ணக் கொடிகள் தெரிகின்றன.

சனிக்கிழமை காலை பருத்தித்துறை இராணுவ முகாமின் கல்லூரி வீதியில் அமைந்த பாதுகாப்பு அரண் அருகே வெள்ளைக் கொடி பறக்க விடப்பட்டது.

இதனைக் கண்ட போராளிகள் தமதுபாதுகாப்பு அரண் அருகே சிவப்புக் கொடியைப் பறக்க விட்டனர். பின்பு இராணுவத்தினரும் அப் பாதுகாப்பு அரண் அருகே சிவப்புக் கொடியைப் பறக்கவிட்டனர். (உ-118)

### வெளியூர் தொலைத்தொடர்பு 'அவுட்'

யாழ்ப்பாணம், அக். 13

நேற்று பிற்பகலில் இருந்து யாழ் மாவட்டத்துடனான வெளி மாவட்ட தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.

கடந்த சில வாரங்களாக இத் தொலைபேசித் தொடர்புகள் சீரற்ற நிலையிலே இருந்து வந்தன. (உ-எ)

### கடிகாரத்துக்கு அதிர்ச்சி!

யாழ்ப்பாணம், அக். 13

'5.58'-

யாழ் ஆஸ்பத்திரி மேகநோய் நிலையக் கட்டடத்தின் மேல் ஷெல் விழுந்த நேரம்.

அவ்வேளை ஏற்பட்ட அதிர்ச்சியினால் கட்டடச்

(4ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் மாவட்டப் பொறுப்பாளர்

# மன்னார் விக்ரர் சமரில் மரணம்

நேற்று மன்னார் அடம்பனில் நிகழ்ந்த மோதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் விக்ரர் வீரமரணமடைந்தார்.

மன்னாரில் புலிகள் இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதில் தளபதி விக்ரர் பெரும் பங்கு வகித்தார். அந்தப் பகுதியில் போராளிகளை உரிய முறையில் வழிநடத்தி வந்தவர் இவர்.

1983 ஆம் ஆண்டு ஜூலையில் திருநெல்வேலியில் இராணுவப் படையினர் 13 பேர் உயிரிழந்த அதிரடித் தாக்குதலில் இவர் பங்கு கொண்டார்.

அதிலிருந்து அவர் இறக்கும்வரை தொடர்ந்து போராளியாகவே இருந்தார். (உ)

# அடம்பனில் நேற்று தொடர்ச்சியான கடும் மோதல்!

## சுற்றி வளைக்க வந்த சிப்பாய்களைப் புலிகள் தாக்கினர்

யாழ்ப்பாணம், அக்டோபர் 13

மன்னார் அடம்பனில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச சிப்பாய்களுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றது. சனிக்கிழமை மாலை தொடக்கம் நேற்றுப் பிற்பகல் சுமார் மூன்று மணிவரை தொடர்ச்சியாக மோதல் நடந்தது.

அடம்பனைச் சுற்றி வளைத்து முற்றுகையிட முற்பட்ட இருநூறுக்கும் அதிகமான இராணுவத்தினரை புலிகள் கடுமையாகத் தாக்கினார்கள்.

அப்பகுதிகளில் குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளைப் பொழிந்ததாகவும் ஹெலிக்கொப்டர்களிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் அரச படையினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் பல சிப்பாய்கள் உயிரிழந்திருப்பதாகவும் மற்றும் பலர் படுகாயமடைந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இச்செய்தி நேற்றிரவு எழுதப்படும் வரை இரு பகுதியினரும் சமராடிக் கொண்டிருந்ததாக அறிவிக்கப்படுகிறது.

சனிக்கிழமை இரவு முதல் அடம்பனில் கடும் மோதல் நிகழ்ந்து வருகிறது. குண்டு வீச்சும் நடந்து வருகிறது.

விடாது பெய்யும் மழைக்கு மத்தியிலும் மோதல் தொடர்வதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

அடம்பனில் குடிசனம் குறைவாக இருப்பதால் குண்டுவீச்சால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்துச் சரிவரத் தகவல்கள் இல்லை.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தள்ளாடி முகாமிலிருந்து நடந்து வந்து அடம்பனை முற்றுகையிட முயன்ற இராணுவத்தினரை எமது வீரர்கள் அடம்பன் அரசாங்கப் பாடசாலை, தேவாலயம் ஆகியவற்றிற்கு அருகில் வைத்து சுற்றிவளைத்துத் தாக்கினர்.

**குண்டுவீச்சு**

இராணுவத்தினருக்கு உதவியாக ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இரு குண்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

### விமானி பலி!

கொழும்பு, அக். 13

அடம்பனில் அரச ஹெலிக்கொப்டர் ஒன்றைப் புலிகள் தாக்கியதில் விமானி ஒருவர் கொல்லப்பட்டார்.

ஹெலிக்கொப்டருக்கு ஏற்பட்ட சேதம் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

அடம்பன் மோதலில் மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன. (உ)

### சுபநேரம்

13-10-1986
திங்கட்கிழமை
சுபநேரம்:
12.02 முதல் 1.32 வரை
ராகுகாலம்:
7.32 முதல் 9.02 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்



அட கடவுளே! வீடு வாசல்களிலை இருக்கிற சனத்துக்குத் தான் உயிராபத்து எண்டால் தாயின் வயிற்றுக்குள் இருக்கும் சிசுவுக்குக்கூட பாதுகாப்பு இல்லையே! என்ன அசுரத்தனமடா இது...!

### சாவை எதிர்நோக்கும் ஓர் அன்னையின் குரல்

# நான் இறப்பதற்கு முன் மகனைப் பார்க்க அனுமதியுங்கள்

## சிங்கராயரின் வயோதிப தாயார் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், அக். 13

நோய்வாய்ப்பட்டுள்ள நான் மரணத்தை எய்தும் நிலையில் இருக்கிறேன். நான் இறப்பதற்கு முன்னர் ஒரு சில நிமிடநேரமேனும் என்னைப் பார்ப்பதற்கு சிறையில் வாடும் என் மகன் வண. பிதா சிங்கராயருக்கு அனுமதியளியுங்கள்.

வண. பிதா. சிங்கராயரின் தாயாரான 86 வயது மூதாட்டி ஆபரணம் சலோமைப்பிள்ளை. ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தொடர்ந்து கூறியுள்ளதாவது;

எண்பத்தாறு வயதில் படுக்கையில் கிடக்கும் என்னால் கையெழுத்துக்கூட இடமுடியாத நிலை, சாவு வந்து சேரு முன்னர் எனது மகனின் முகத்தை ஒரு தடவை பார்த்து விடவேண்டும் என்று துடிக்கிறேன்.

நீதிமன்றத்தில் வாதாடிதான் நிரபராதி என்று நிலைநாட்டும் வரைக்கும் சிறையிலிருந்து வெளியே செல்வதில்லை என்பது எனது

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பேர்னட் - சிதம்பரம் நேற்று சந்தித்துப் பேச்சு

புதுடில்லி, அக். 12

இனப்பிரச்சினைப் பேச்சுக்களில் தமிழ்ப்போராளிகளைக் கலந்து கொள்ளச் செய்வதற்கான இந்திய முயற்சி எந்தளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது?

இது குறித்து புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் பேர்னட் திலகரத்தின, இணை அமைச்சர் பா. சிதம்பரத்திடம் கேட்டறிந்து கொண்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை திரு. திலகரத்தின, வெளியுறவு அமைச்சுச் செயலாளர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரனைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனும் கடந்த வெள்ளிக்கிழமைதான் பிரதமர் ராஜீவ்காந்தியைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

அச்சமயம் மூன்றும் கட்டப் பேச்சுக்களில் போராளிகளைக் கலந்து கொள்ளச் செய்யும் முயற்சிகளை மேற்கொள்ளும்படி பிரதமர், முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனைக் கேட்டுக் கொண்டார் என்று தெரிகின்றது. (உ-எ)

### ஸ்ரீலங்காவுக்கு

# அமெரிக்க ராணுவ உதவி குறித்துஇந்தியா அதிர்ச்சி

புதுடில்லி, அக். 12

நிக்கரகுவா கிளர்ச்சியாளருக்கு உதவும்பாணியில் இலங்கை அரசுக்கும் உதவி வழங்க அமெரிக்கா முன்வந்து இருப்பது இந்திய பாதுகாப்பு வட்டாரங்களில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பயங்கரவாத ஒழிப்புத் திட்டத்தின் கீழ் உதவி பெறும் நாடுகள் அமைப்புக்கள் பட்டியலில் இலங்கையையும் அமெரிக்க அரசாங்கம் சேர்த்துக் கொண்டதாகச் செய்தி வெளியாகியுள்ளதல்லவா?

இது குறித்து மேலதிக விவரங்களைப் பெற்று அனுப்பும்படி இந்திய அரசு, வாஷிங்டன், கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள தனது தூதர்களைப் பணித்துள்ளது.

இந்த அறிக்கைகள் கிடைத்த பின்னரே, அமெரிக்காவின் இந்த நடவடிக்கை குறித்து இந்தியஅரசு உத்தியோகபூர்வமான கருத்துக்களை வெளியிடும் என்று இந்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வெயின்பேகர் இந்திய விஜயம் ஒன்றை மேற்கொண்டு புதுடில்லி வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-ஐ-எ)

## வாழைச்சேனையில் 2 கமாண்டோக்கள் பலி

யாழ்ப்பாணம், அக்.13

வாழைச்சேனை பொலீஸ் நிலையத்திலிருந்து இரு ஜீப்வண்டிகளில் நேற்று புறப்பட்ட விசேட அதிரடிப் பொலீஸார் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதில் இரண்டு அதிரடிப்படையினர் (கமாண்டோக்கள்) பலியாகினர் என்று அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது வீரர்கள் ஜீப் வண்டிகள்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### அரசாங்க அதிபர் நேற்று பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், அக். 13

ஷெல் தாக்குதலில் சேதமடைந்த யாழ் ஆஸ்பத்திரியின் மேக நோய் சிகிச்சை நிலையக் கட்டடத்தை நேற்றுக் காலை யாழ் அரச அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கம் சென்று பார்வையிட்டார்.

நேற்று முன்தினம் மாலை யாழ் கோட்டை முகாமில் இருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் இந்த நிலையக் கட்டடம் சேதமடைந்தது.

யாழ் ஆஸ்பத்திரி, யாழ் செயலக வளவு ஆகியவற்றில் ஷெல் விழுந்த சம்பவங்கள் குறித்து யாழ். அரச அதிபர் கொழும்புக்கு அறிவித்திருக்கிறார். (உ-எ)

### ஷெல் தாக்குதலின் விளைவு

## யாழ் ஆஸ்பத்திரியில் மேக நோய் சிகிச்சைப் பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டது

யாழ்ப்பாணம் அக். 13

மேக நோய் சிகிச்சை நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

யாழ்-ஆஸ்பத்திரி மேகநோய் சிகிச்சைப் பிரிவில் கடந்த சனிக்கிழமை ஷெல் விழுந்து வெடித்ததை அடுத்து கட்டடம் முழுவதும் பலத்த சேதம் அடைந்துள்ளது.

கட்டடத்தின் உள்ளே பாரிய குழி ஒன்று காணப்படுவதுடன் சுவர்கள் சரிந்து வீழ்த்தப்பட்டுள்ளன.

தண்ணீர் பைப்புகள் சிகிச்சைப் பிரிவுப் பொருள்கள் அனைத்தும் ஷெல் குண்டினால் சிதறியுள்ளன.

இத் தாக்குதலை அடுத்தே இச் சிகிச்சை நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (உ-10)

அறிவித்தல்
(பெயர் மாற்றம்)
கடந்த பல காலங்களாக
INTERSUN GROUP
என்ற பெயரில் பிரயாண ஒழுங்குகளை மேற்கொண்டுவந்த எமது ஸ்தாபனம்
8-10-86 (புதன்கிழமை)
தொடக்கம்
GLORIA TRAVELS
என்ற புதிய பெயருடன் இயங்கும் என்பதை சகலருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ.
மானிப்பாய்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி அகதிகளில்

# 6,285 குடும்பங்களுக்கு

# உ த்தரவு பத்திரம்

## உணவுப் பொருள் பெறுவதற்கு

கிளிநொச்சி, அக்.13 கிளிநொச்சியில்கடந்த ஜூன் நான்காம் திகதி முதல் ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்து குறிப்பாக கிளிநொச்சி கிராமசேவகர் பிரிவிருந்து மக்கள்இடம் பெயர்ந்தனர், இவ்வாறு இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தஞ்சம் புகுந்துள்ள கிளிநொச்சி அகதிகளில் சுமார் 6285 குடும்பங்கள் அரசினால் வழங்கப்படும் நிவாரணத் திட்டத்தின்கீழ் ஒருவார காலத்திற்கான பங்கீட்டு உணவு பெறுவதற்கான உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுள்ளன.

உத்தரவுப் பத்திரம் பெற்றவர்களில் சுமார் 600 குடும்பங்களுக்கு யாழ் மாவட்டத்திலும் 300 குடும்பங்களுக்குமுல்லைத்தீவு மாவட்டத்திலும் 5385 குடும்பங்களுக்குகிளிநொச்சிமாவட்டத்திலும் வைத்து ஒரு வாரபங்கீட்டுஉணவு உத்தரவுப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்த உத்தரவுப் பத்திரம் பெற்றவர்களுள் ஒருவர் உள்ள குடும்பத்திற்கு 55 ரூபாவும், இருவர் உள்ள குடும்பத்பத்திற்கு 85 ரூபாவும், மூவர் உள்ள குடும்பத்திற்கு105ரூபாவும் நால்வர் உள்ள குடும்பத்திற்கு 125 ரூபாவும், ஐவர் உள்ள குடும்பத்திற்கு 155 ரூபாவும், அறுவர் உள்ள குடும்பத்திற்கு 170 ரூபாவும், எழுவர் உள்ள குடும்பத்திற்கு 185 ரூபாவும்,எண்மருக்கும் அதற்கு மேற்பட்டவர்களும் உள்ள குடும்பத்திற்கு 200 ரூபாவும் பெறுமதியான உணவுப் பத்திரமும் வழங்கப்பட்டன.

இந்த உணவுப்பத்திரங்கள் வழங்கும் வேலை கடந்த வாரமே முடிவடைந்தன. இதற்குரிய உத்தரவினை முன்னை நாள் அரசாங்க அதிபர் என். ஜெகநாதன் புனர்வாழ்வு அமைச்சுடன் தொடர்புகொண்டு அகதி நிவாரணம் வழங்குவதற்காக அமைச்சின் அனுமதியைப் பெற்றிருந்தார்.

இராணுவ முகாம் சூழலில் இருந்து வெளியேறி அயல் கிராமங்களில் தஞ்சமடைந்தவர்களுக்கு ஒருவார காலத்திற்கானபங்கீட்டுஉணவு பெறுவதற்கான உத்தரவுப் டுத்திரமும், பாதிக்கப்பட்டு தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி மீண்டும் தமது பழைய இடங்களுக்குத் திரும்பியவர்களுக்கு இரண்டுவார காலத்திற்கானபங்கீட்டுஉணவுடுஉத்தரவுப் பத்திரமும் வழங்க அப்போது புனர்வாழ்வு அமைச்சு சிபார்க செய்திருந்தது.

ஆனால் தற்போது கிளிநொச்சியில் பாதிக்கப்பட்டு வெளியேறியவர்களுக்கான ஒருவாரகாலத்துக்கானபங்கீட்டு உணவு பெறும் உத்தரவுப் பத்திரம் மட்டும்தான் இந்த வாரம்வரை வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்டு சென்று மீண்டும் பழைய இடங்களுக்குத் திரும்பியவர்களுக்கான நிவாரணம் இதுவரை வழங்கப்படவில்லை. இது வழங்கப்படுமா என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது. (இ-76)

GLORIA TRAVELS

● கனடா ● டென்மார்க்
● பிரான்ஸ் ● ஜெர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்
டென்மார்க், கனடா செல்வதற்கு
உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.
மற்றும்
பாஸ்போட், பொண்ட் (BOND)
விசா, ரிக்கற்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி
● குவைத்
● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணிகளை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார். இதுவரை எமது பல பயணிகள் வெற்றிகரமாகவும் விரைவாகவும் நடைபெற்றன்னது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்குச் செல்ல விரும்பும் பெண்கள் (குறிப்பாக மணம் செய்தவர்கள், மணம் செய்யவிருப்பவர்கள்) உங்களை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.

குவைத்துக்கு Airport Cleaners (ஏயார்போட் கிளீனேர்ஸ்) ஆக செல்ல விரும்புபவர்கள் நேரடியாக பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவிற்கு வீடு வேலைக்கு விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

பண் இல: 764
பலாலி வீதி,
கோண்டாவில்
கிழக்கு.

தொடர்பு:
N. பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில்
கிழக்கு.

★ உங்கள் நன்மை கருதி நீர்வேலி பகுதியில் ஓமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் என்னும் பெயரில் கந்தசாமி கோவிலடி சந்தியில் அமைந்துள்ளது.
★ ரூபிள்ளையன் சந்திக்கு அருகாமையிலும் ஓமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

## செய்திக்கொத்து

### வடமராட்சியில் நாற்று மேடை

வல்வெட்டித்துறை அக். 13

வடமராட்சியில் விவசாயிகள் நாற்று மேடை போடும் வேலையை ஆரம்பித்துள்ளனர்.

உயர்ரக நாற்றுக்கள் பொலிகண்டி, திக்கம் அல்வாய் போன்ற இடங்களில் தான் போடப்படுகின்றன.

பல இடங்களிலும் இருந்து பெரும் திரளான விவசாயிகள் நாற்றுக் கன்றுகளுக்கு இங்கு தான் வருவது வழக்கம் (இ - 160)

### முதலைப் பாலம் திருத்தப்படுகிறது

முள்ளியவளை. அக் 13 ஒட்டுசுட்டான் சந்தியில் முல்லைத்தீவு வீதியில் உடைக்கப் பட்டிருந்த முதலைப் பாலாத்தைத் திருத்தும் வேலையை பெருந்தெருக்கள் திணைக்களம் ஆரம்பித்து வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (இ - 93)

### மீன்பிடிக்கச் செல்லவேண்டாம்

வல்வெட்டித்துறை. அக். 13

கடற்படையினரின் தாக்குதல் அதிகரித்திருப்பதால் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று வல்வை பிரசைகள் குழுத் தலைவர் வல்வை மீனவருக்கு வேண்டு கோள் விடுத்துள்ளார். (இ - 160)

### வருடாந்த பாசறை நிகழ்ச்சி

புங்குடுதீவு. அக். 13 யாழ் மாவட்ட சாரணர் கிளைச்சங்கத்தின் வருடாந்த பாசறை சிம் மாதம் 17 ஆம் – 18 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (இ-131)

### சிரமதானம்

சாவகச்சேரி அக் 13 உலக லயன்ஸ் சேவை தினத்தையொட்டி லயன்ஸ், லியோ கழகங்கள் கூட்டாக, கைதடி சாந்தி (வயோதிபர்) இல்லத்தில் சிரமாதானப் பணிகளை மேற்கொண்டன. (இ - 131)

### குண்டு கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு, அக்.13 மட்டக்களப்பு பிரதி பொலீஸ் மா அதிபர் அலுவலகத்துக்கு அருகில் குண்டு ஒன்று கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

வெள்ளியன்று இச் சம்பவம் இடம் பெற்றத.

ஆயுதப் படையினரால் பின்னர் குண்டு செயலிக்கச் செய்யப்பட்டது. (இ-ஐ-எ)

### பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்.அக்.13 வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9. 30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கலூரியில் நடைபெறும்.

மாவட்ட பொதுச் செயலாளர் திரு. வே. சிவராசா இப் பொதுக் கூட்டத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (இ -9)

### கருப்பையா தலை பிளந்தவாறு இறந்து கிடந்தார்

யாழ்ப்பாணம், அக். 13

ஷெல் விழுந்து வெடித்ததை அடுத்து கருப்பண்ணை தலை பிளந்த நிலையில் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார்.

சனியன்று யாழ் நகரில் நடைபெற்ற ஷெல் தாக்குதலினால் காயமடைந்த சௌந்தரராஜன் இவ்வாறு எமது செய்தியாளரிடம் சொன்னார்.

சுபாஸ் கபே சமையல் பகுதியினுள் ஷெல் விழுந்து வெடித்ததனால் காளிமுத்து கருப்பையா (45 வயது) அந்த இடத்திலேயே மரணமானார்.

யாழ் சிவன் கோயிலடியைச் சேர்ந்த இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

சௌந்தரராஜன் மேலும் சொன்னதாவது:–

காலை ஒன்பது மணி இருக்கும். சுபாஸ் கபே சமையல் பகுதிக்கு பின்புறம் உள்ள கிணற்றடியில் நான் நின்று கொண்டிருந்தேன்.

அப்பொழுது பாரிய சத்தத்துடன் குண்டு வெடித்தது. எனக்கு அருகில் நின்ற சாமி அண்ணன் தண்ணீர்த் தொட்டிக்குள் குதித்துவிட்டார்.

எனது முதுகில் பெரிய கல் ஒன்று விழுந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

சாமி அண்ணன் என்னையும் தூக்கி தண்ணீர்த் தொட்டிக்குள் போட்டார்.

குண்டுச் சத்தம் ஓய்ந்ததும் எழுந்து பார்த்த பொழுது கருப்பையா அண்ணன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார்.

சமையல் பகுதி கூரை முழுவதும் பலத்த சேதம் அடைந்திருந்தது.

இப்படி அவர் சொன்னார். (இ–10)

### சைக்கிளில் வந்தவருக்கு ஏற்பட்ட பயங்கரம்

யாழ்ப்பாணம், அக். 13

சைரன்' சத்தம் கேட்டதும் சைக்கிளை விட்டு விட்டு கடைக்குள் ஓட முற்பட்ட போது ஷெல் விழுந்து வெடித்தது. இதனால் எனக்கு காயம் ஏற்பட்டது. எனது சைக்கிளும் இரண்டு மூன்று துண்டுகளாக உடைந்தது.

யாழ் பஸ் நிலையத்தில் ஓட்டோஸ் மேலாக விழுந்து வெடித்த ஷெல் காரணமாக சிவன் கோயிலடியைச் சேர்ந்த நாதசுரம் வாசிப்பவரான இராமையா சோமசுந்தரம் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

தனக்கு நடந்த சம்பவம் பற்றி அவர் மேலும் சொன்னதாவது:–

ஷெல் குண்டுகள் நகர்ப் பகுதியில் பரவலாக விழுந்து கொண்டிருந்தன.

'சைரன்' சத்தமும் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தது.

நான் பயம் காரணமாக கடை ஒன்றுக்குள் படடுதற்காக சைக்கிளை விட்டுவிட்டு இறங்குவதற்குள் எனக்கு அருகாமையில் கரும்புகையுடன் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது.

எனது உடலில் இரத்தம் வழியத் தொடங்கியது. நான் அப்படியே விழுந்து விட்டேன் சைக்கிளும் துண்டு துண்டாக உடைந்தது.

பின்னர் கடைக்காரர் ஒருவர் என்னை தனது கடைக்குள் இழுத்துச்சென்று யாழ் ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்தார்

இப்படி அவர் சொன்னார். (இ–10)

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### கடலோரப் பகுதியில் தென்னை

பருத்தித்துறை, அக்.13 யாழ்– குடாநாட்டின் கடற்கரையோரப் பகுதியில், நல்லின தென்னைகளை வளர்க்கும் நோக்கத்துடன் அம்பன், கீரிமலை விவசாய விரிவாக்க நிலையங்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன.

இவ்விரு நிலையங்களும் சுமார் 6 ஆயிரம் நல்லின தென்னங்கன்றுகளைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்யவுள்ளன.

இக்கன்றுகள் பொது மக்களுக்கு தலா 6ரூபாப் படி விற்பனை செய்யப்படும். தென்னங்கன்று தேவைப்படுவோர் தங்கள் பகுதிப் பயிர்ச் செய்கை உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (உ–118)

### பூரணசந்திர கிரகணம்

கொழும்பு, அக் 13 எதிர்வரும் வெள்ளிக் கிழமை பூரணை தினத்தன்று பூரண சந்திரகிரகணமும் இடம் பெறும்.

இலங்கையில் இச் சந்திர கிரகணம் தெரியும்.

வெள்ளி இரவு9.50குக் கிரகணம் ஆரம்பமாகி சனி அதிகாலை 3.46க்கு விலகும்.

நள்ளிரவு 12–11 முதல் 12.5 வரை பூரண சந்திர கிரகணம் தெரியும். (இ–எ)

### மீனவர்கள் மீது தாக்குதல்கள்

வல்வெட்டித்துறை, அக். 13

வல்வெட்டித்துறை, பலாலி, மயிலிட்டி கடற் பகுதிகளில் சனியன்று கடற்படையினரால் மீனவர்கள் பலர் தாக்கப் பட்டனர்.

வல்வெட்டித்துறை மயிலியதனைப் பகுதியில் மீனவர்களின் படகுகள் சில கடற்படையினரால் சேதப்படுத்தப்பட்டன. மீனவர்களும் கடலில் தூக்கி வீசப்பட்டனர்.

கரை வந்து சேர்ந்த மீனவர்கள் பிரசைகள் குழுத்தலைவரிடம் முறையீடு செய்துள்ளனர்.

பலாலி, மயிலிட்டி போன்ற இடங்களிலும் மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். சில மீனவர்கள் வாள், கத்தி வெட்டுக்கும் உள்ளாகி இருக்கின்றனர். படகுகளும் சேதமாக்கப்பட்டன.

காயத்துக்குள்ளான மீனவர்கள் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (இ-160)

## மேலும் 175 முஸ்லிம்கள்

### அகதிகளாகி திருமலை வந்தனர்

திருகோணமலை, அக்.13 மேலும் 175 முஸ்லிம் கிராமவாசிகள் திருகோணமலை நகரில் சனிக்கிழமை அகதிகளாகத் தஞ்சமடைந்தனர்.

இவர்கள் திருமலை, நிலாவெளி வீதியில் 6, 7, 8 ஆம் கட்டைப் பகுதிகளில் வசித்து வந்தனர்.

சாம்பல்தீவு, சல்லி கிராமங்களை ஆயுதப் படையினர் முற்றுகையிட்டுள்ளனர் அல்லவா! அதைத் தொடர்ந்து ஆயுதப் படையினரின் நடமாட்டம் இப்பகுதிகளில் அதிகரித்துள்ளது.

பீதி காரணமாகவே வீடுவாசல்களை விட்டு அகதிகளாக திருமலை நகர் வந்ததாக இவர்கள் தெரிவித்தனர்.

உப்புவெளி, ஜமாலியாப் பகுதியில் அரசினர் பாடசாலையில் இம் முஸ்லிம் மக்கள் தங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-எ-150)

### பயிற்சி வகுப்புகள்

மானிப்பாய், அக்.13 யாழ்ப்பாண பாடசாலைகளில் உயர் வகுப்புக்களில் வர்த்தகம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி வகுப்புக்கள் இம்மாதம் 14, 15ம் திகதிகளில் யாழ்ப்பாணம் தொழில் நுட்ப கல்லூரியில் நடைபெறும்.

திரு. எஸ். சிவராசா (வட்டாரக் கல்வி அதிகார்– வர்த்தகம்) இப் பயிற்சி வகுப்புக்களை ஒழுங்கு செய்துள்ளார்.

யாழ். கல்வி திணைக்கள கல்வி அதிகாரி திரு. கே. சோமசுந்தரம் இப் பயிற்சி வகுப்பில் தொடக்கவுரை நிகழ்த்துவார். யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் திரு. பி. இராசேந்திரா சிறப்புரை ஆற்றுவார். (உ-90)

### மீனவர்களுககு எச்சரிக்கை

வல்வெட்டித்துறை, அக். 13

கரையோரப்பகுதி மீனவர்களை கடலுக்குச் செல்லவேண்டாம் என வல்வெட்டித்துறைப் பிரசைகள் குழுத்தலைவர் திரு. கே. திருநாவுக்கரசு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

அடிக்கடி கடற்படையினரிடம் மீனவர்கள் அகப்பட்டு கஷ்டப்படுவதைத் தவிர்க்குமுகமாகவே மேற்படிக் கோரிக்கையை அவர் விடுத்தார்

வடபகுதி மீனவர்களின் கஷ்டங்கள் சொல்ல முடியாதவை. அவர்களின் வாழ்க்கைச் செலவை அரசாங்கம் வழங்கும் மீனவர் நிவாரண முத்திரைகளினால் சமாளிக்க முடியாது.

ஆனால் கடலுக்குச் செல்லாமல் விடுவதன் மூலம் மீனவர்களின் உயிரைக் காப்பாற்றலாம். —இப்படி அவர் தெரிவித்தார். (உ-160)

### தீவுப் பகுதியில் நெருப்புக் காய்ச்சல்

வேலணை, அக். 13

தீவுப் பகுதியில் வயிற்றுளைவு, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் வேகமாகப் பரவத் தொடங்கியுள்ளன. பாதிக்கப்பட்டோர் பெரும் எண்ணிக்கை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்கள்.

## விளையாட்டரங்கு

உதைபந்தாட்டம்:

### சென்ஹென்றீஸ் 3பிரிவுகளிலும் வெற்றி

இளவாலை, அக். 13 இளவாலை விளையாட்டு மைதானத்தில் சென். ஹென்றீஸ் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையே நடந்த சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகளில் சென் ஹென்றீஸ் வென்றது.

முதலாம் பிரிவு 3–0, இரண்டாம் பிரிவு 1–0, மூன்றும் பிரிவு 3–0 என்ற கோல்கள் அடிப்படையில் சென் ஹென்றீஸ் வெற்றி பெற்றது.

திரு. ரீ. இராசேந்திரா. திரு. என். இராமநாதர், திரு. எஸ். வீ. விக்கிரமசிங்கம் முறையே நடுவர்களாகக் கடமையாற்றினர்.

முதற்பிரிவில் கோல்களைப் போட்ட பெஞ்சமின், பிலிப் சந்திரசேகரம், சேவியர் ஆகியோருக்கு வெளிநாட்டிலிருந்து வந்த சென். ஹென்றீஸ் கல்லூரி முன்னாள் உதைபந்தாட்ட வீரர் ஒருவர் பாராட்டுப் பரிசுகளை வழங்கிக் கௌரவித்தார். (இ–48)

### வொலி சொக்கர்

கரவெட்டி, அக். 13 வதிரி பிறதேர்ஸ் ஆதரவில் 'வொலி சொக்கர்' எறிபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 18, 19ஆம் திகதிகளில் டயமன் மைதானம் அருகில் நடைபெறும். (இ-70)

தாச்சிப்போட்டியில்

### சண்டிலிப்பாய் ஐக்கிய விளையாட்டு கழகம் முதலிடம்

சாவகச்சேரி, அக். 13 கைதடி வடக்கு செல்வா சனசமூக நிலையம் வடமாகாண ரீதியில் நடத்திய தாச்சிப் போட்டியில் சண்டிலிப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழகம் முதலாவது இடத்தைப் பெற்றது.

சுமார் 60 கழகங்கள் பங்குபற்றிய இப்போட்டியில் சுன்னாகம் கலைவாணி விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் சாவகச்சேரி சங்கிலிநாயகர் விளையாட்டுக்கழகம் மூன்றும் இடத்தையும் பெற்றன.

இப்போட்டிக்கு பிரதம திர்ப்பாளராக விசேட சேவையாளர் திரு. பொ. திருநாவுக்கரசு கடமையாற்றினார்.

நான்கு தினங்கள் தொடர்ந்து நடைபெற்ற இப்போட்டிகளை சனசமூக நிலையக்காப்பாளர் திரு. வை.வேலுப்பிள்ளை விசேட சேவையாளர் பொ. திருநாவுக்கரசு ஆகியோர் மங்கள தீபமேற்றி ஆரம்பித்து வைத்தனர். (இ-31)

### சாம்பல்தீவு பகுதியில் போராளிகளின் தாக்குதல் தொடர்கிறது

கொழும்பு, அக். 18 திருகோணமலைத் தொகுதியில் சாம்பல் தீவுப் பகுதியில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னரும் ரோந்து செய்யும் படையினர்மீது, தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்தியே வருகின்றனர்.

இப்படிதிருமலை இணைப் பதிகாரி லெப்டினட் கேணல் விஜயரத்தின வெளிநாட்டுச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சாம்பல்தீவு சல்லி

(4–ம் பக்கம் பார்க்க)

தேவை

தையல்வேலை தெரிந்தவர் உடன் தேவை.
''ராதா ரெயிலறிங்''
பிரதான வீதி,
அச்சுவேலி.

பிரயாண ஒழுங்குகள்
குவைத்

எல்லாவிதமான வசதிகளுடன் பிரயாண ஒழுங்குகள் உடன் செய்து தரப்படும். போக விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
மற்றும்
பாஸ்போட், பொண்ட், விசா, ரிக்கற்
ஆகிய ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
SUPERB RANK.
PALALY ROAD, THIRUNELVELY.
JAFFNA.

விமானச்சீட்டுக்கள், பாஸ்போர்ட்
பொண்ட், விசா, ரெலக்ஸ்
CONFIMATION E-CONFIMAIO
தொலைபேசிச் சேவை: 23364, 28866
நிப்பொன் ரெலி ரவல்ஸ்
2 G ஸ்ரான்லி வீதி,
கஸ்தூரியார் - ஸ்ரான்லி வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

"என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் பிரீதியாய் இருப்பதாக"

(சங். 19:14)

உதயன்

இல. 15 வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073

13-10-1986 த.பெ. இல. 23

## அமெரிக்கா - ஸ்ரீலங்கா டும், டும், டும்....!

ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு அமெரிக்கா இராணுவ உதவிகளை வழங்கப்போகிறது. இதனை அமெரிக்கா, உத்தியோக பூர்வமாக வெளியிட்டிருக்கிறது. அமெரிக்க ராஜாங்க அமைச்சு கடந்த மாதம் வெளியிட்ட அறிக்கையில் ஸ்ரீலங்காவுக்கு இராணுவ உதவி வழங்குவது குறித்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எந்த நாட்டிடம் இருந்தும் தாம் இராணுவ உதவி பெறவில்லை என்ற வழமையான மறுப்புப் பல்லவியை ஸ்ரீலங்கா இனிப்பாட முடியாது.

இதுவரை காலமும் பாகிஸ்தான் மற்றும் அமெரிக்க ஆதரவு நாடுகள் ஊடாகக் கிடைத்து வந்த இராணுவ உதவி இனி நேரடியாகக் கிடைக்கப் போகிறது. மறைமுகமாகப் பின் கதவால் கிடைத்து வந்தது, இனி நேரடியாக முன் கதவால் கிடைக்கப் போகிறது.

தான் ஒரு அணிசேரா நாடு என்று ஸ்ரீலங்கா போட்டு வந்த வேஷம் கலைந்து விட்டது. அது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் 'பந்தம்' என்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

திம்பு மாநாடும் தோற்ற பின்னர், ஒரு கட்டத்தில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, பயங்கரவாதத்தை அடக்க மேற்கு நாடுகளின் உதவியைப் பகிரங்கமாகக் கேட்டிருந்தார்.

அந்த விண்ணப்பத்துக்கு இப்போது பெறுபேறு கிடைத்திருக்கிறது! நிக்கரகுவாவில் வலதுசாரிக் கெரில்லாக்களுக்கு வழங்கப்படும் அதே வகையில் ஸ்ரீலங்காவுக்கும் அமெரிக்க இராணுவ உதவி கிடைக்கப் போகிறது. அங்கு இடதுசாரி அரசுக் எதிராகக் கிடைக்கும் இராணுவ உதவி, இங்கு அரசாங்கப் பயங்கரவாதத்துக்கு ஆதரவாகக் கிடைக்கப் போகிறது. அவ்வளவு தான்!

பயங்கரவாதம் பற்றி இப்போது உலகம் முழுவதும் பேசப்படுகிறது. அனேகமாக உலக நாடுகளில் சுமார் அரைவாசியில் பயங்கரவாதம் தலை தூக்கியிருக்கிறது. ஆனால் பல நாடுகளில் விடுதலைப் போராட்டங்களையும் பயங்கரவாதம் என்று நாமகரணம் செய்து விடுகிறார்கள்.

அரசாங்கப் படைகள் செய்யும் பயங்கரவாதமும் இராணுவ நடவடிக்கை என்ற மூலாம் பூசப்பட்டு நியாயப் படுத்தப்படுகிறது.

ஆகையால் உண்மையான பயங்கரவாதம் எது என்று பூரணமான வரைவிலக்கணம் கொடுக்க முடியாத நிலை உண்டு. இடத்துக்கு இடம் அளவுகோலும், கணிப்பு முறையும் மாறுகின்றன. அவரவர் வசதிக்கும், எண்ணத்துக்கும் ஏற்றவாறு வளைக்கப்படுகின்றன.

இந்த லட்சணத்தில் அமெரிக்கா, பயங்கரவாத ஒழிப்புக்கு என்று வெளிநாட்டு உதவிநிதி ஒதுக்கியிருக்கிறது. அதன் கீழ் தனக்குச் சார்பானவர்களுக்கு, இராணுவ உதவி வழங்கி வருகிறது. ஸ்ரீலங்காவுக்கும் அந்த வகையில் உதவி கிடைக்கப்போகிறது.

இது என்ன இராணுவ ஒப்பந்தமா? பயங்கரவாதத்தை அடக்கத்தானே அமெரிக்கா உதவி செய்யப் போகிறது! — இவ்வாறு ஸ்ரீலங்கா அரசு நிச்சயம் "சளப்பல்" நியாயம் பேசும்.

ஆனால் அமெரிக்காவிடம் இருந்து இராணுவ உதவி பெறும் இரண்டாவது ஆசிய நாடாக ஸ்ரீலங்கா விளங்கப் போகிறது என்பதை அது மறுக்க இயலாது.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி இவ்வருட ஆரம்பத்தில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்ததையும் —

பாகிஸ்தான் ஜனாதிபதி ஷியா-உல்-ஹக் ஸ்ரீலங்காவுக்கு வந்ததையும் —

ஸ்ரீலங்கா ஜனாதிபதி தமது உத்தேச சோவியத் விஜயத்தை ரத்துச் செய்ததையும்— சேர்த்துப் பார்க்கும் போது பயங்கரவாதத் தடுப்புக்கு என்ற போர்வையில் ஸ்ரீலங்காவுக்கு வழங்கப்படும் அமெரிக்க இராணுவ உதவியின் பின்னணியியை, சூட்சுமத்தை எவரும் புரிந்து கொள்ள முடியும்.

இது ஆசியாவில், இந்து சமுத்திரப் பிரதேசத்தில் பயங்கர விளைவுகளை உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்து சமுத்திரப் பகுதியை அமைதிப் பிராந்தியம் ஆக்கும் திட்டத்தை வேரோடு அறுக்கும் என்பதில் ஐயமில்லை. அங்கு வல்லரசுகள் மோதலுக்கு இடம் கொடுக்கும் என்பதையும் மறந்துவிடலாகாது.

அது மட்டுமா? ஈழத் தமிழர் பிரச்சினையை சமாதானமாகத் தீர்க்க வேண்டிய அவசியத்தையும் நீக்கிவிடும். இராணுவ பலத்தைக் கொண்டு தனது திட்டங்களைத், தீர்வுகளைத் திணிக்க ஸ்ரீலங்கா அரசுக்கு அமெரிக்க உதவி பக்கபலமாக இருக்கும்.

இனப்பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை. இந்தியா தலையிட நியாயமில்லை. மத்தியஸ்தமும் தேவை இல்லை என்று கூறிய ஸ்ரீலங்கா அரசியல்வாதிகள் இப்போது என்ன சொல்வார்களோ! அமெரிக்கா இராணுவ உதவியே வழங்கப் போகிறதே!

எனவே தமிழரின் உரிமைப் போராட்டத்துக்குப் புதிய பரிமாணம் கொடுக்க வேண்டிய அவசியம் உண்டாகி இருக்கிறது. இதனைத் தமிழர்கள் இப்போதே புரிந்து கொண்டு செயலாற்றுவதே விவேகமானதாகும்.

# முடிவுகள் வெளியிடாமல்

# றேகன் - கோர்பச்சேவ்

# பேச்சுவார்த்தை முடிவு

றெயாவிக், அக். 12

அமெரிக்க ஜனாதிபதி றேகனும் ரஷ்ய அதிபர் கோர்பச்சேவும் தமது இரண்டு நாள் பேச்சுவார்த்தைகளை நேற்று ஞாயிற்றுக்கிழமை பூர்த்தி செய்தனர்.

பேச்சு விபரங்களை வெளியிடுவதில்லை என இருதரப்பினரும் ஏற்கனவே உடன்பட்டபடி செய்திகள் எவையுமே வெளியிடப்பட வில்லை. செய்தியாளர்களுக்கும் அறிக்கை கொடுக்க இரு தரப்பினரும் சம்மதம் தெரிவிக்கவில்லை.

இவர்களால் நியமிக்கப்பட்ட இரு குழுக்கள் தமது அறிக்கையை நேற்றுச் சமர்ப்பித்திருந்தன.

ஒரு குழு அணு ஆயுத சோதனை பற்றியும் மற்றக் குழு மனித உரிமைகள் பற்றியும் அறிக்கைகள் சமர்ப்பிக்குமாறு தெரிவு செய்யப்பட்டிருந்தன.

இதனால் ஆயுதக் கட்டுப்பாடும் மனித உரிமைப் பிரச்சினையும் பேச்சுக்களில் முக்கிய இடம் பெற்றிருக்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

கடந்த வருடம் ஜெனீவா உச்சிமாநாட்டின் பின்னர் நடந்த இச்சந்திப்பினால் வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள உச்சிமாநாடு சமூகமான தீர்வுகளுக்கு வழிவகுக்கும் என நம்பப்படுகின்றது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரங்களைச் சேகரிக்கவென ஐஸ்லாந்து வந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மூவாயிரத்திற்கும் அதிகமான செய்தியாளர்கள் நாட்டைச் சுற்றிப்பார்ப்பதில் கவனம் செலுத்துகின்றனராம். (ஒ)

## 100 வயதிற்கு மேற்பட்டோர் வசிக்கும் பகுதி

மாஸ்கோ, அக். 12

ரஷ்யாவின் துருக்மேனியா மலைக்கிராமத்தில் மட்டும் 100 வயதுக்கு மேலானவர்கள் 230 பேர் இருக்கிறார்கள்.

இக்கிராமத்தில் பிறந்தவர்களில் 20 வீதத்திற்கும் மேற்பட்டோர் தமது 100 வயது வரை ஆரோக்கியமாக வாழ்ந்துள்ளனர். (ஒ)

## எல்சல்வடோரில் மீட்புப் பணி துரிதம்

சான்சலவசோர், அக் 12

எல்சல்வடோரில் நடந்த பூமி அதிர்ச்சியால் பலியானவர்களையும் இடிந்த கட்டிடங்களுக்குள் சிக்கியிருப்போரையும் மீட்கும் பணி தொடர்ந்து மூன்றுவது நாளாக இன்னும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டது.

இந்த நில அதிர்வினால் பாதிப்படைந்தவரின் தொகை 700 முதல் ஏழாயிரம்வரை இருக்கக் கூடுமென பி. பி. ஸி. தெரிவித்தது.

20 ஆயிரம் மக்கள் இதனால் வீடிழந்தனர். (ஒ)

## மொஸாம்பியர் வெளியேற்றம்

கேப்டவுண், அக். 12

தென் ஆபிரிக்காவிலுள்ள சகல மொஸம்பிக் தொழிலாளர்களையும் உடனடியாக வெளியேறுமாறு தென் ஆபிரிக்கா உத்தரவிட்டுள்ளது.

தென் ஆபிரிக்காவில் உள்ள தங்க, நிலக்கரிச் சுரங்கங்களில் சுமார் 50 ஆயிரம் மொஸாம்பியர் வேலை செய்து வருகின்றனர்.

மொஸாம்பிக்கில் தென் ஆபிரிக்காவிற்கு எதிரான கெரில்லாக்கள் செயல்பட்டு வருவதே இந்த நடவடிக்கைக்கு காரணமாகும். (ஒ)

## பெரஸ் டி கியூலர் பதவி தொடர்வார்

வாஷிங்டன், அக். 12

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதம செயலாளர் பெரஸ்டி கியுலர் மேலும் ஐந்து வருடங்களுக்கு அந்தப் பதவியை வகிப்பதற்கு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஐ. நா. மகாசபை இந்த நியமனத்தை அறிவித்தது.

இவ்வருடம் டிசம்பர் மாதத்துடன் பதவிக் காலம் முடியவிருந்த பெரு நாட்டைச் சேர்ந்த 66 வயதுடைய ராஜீயப் பிரமுகரான பெரஸ்டி கியுலர் 1992 ஆம் ஆண்டு வரை ஐ. நா. பொதுச் செயலாளராக இருப்பார்.

## நேதாஜி பற்றி ஆங்கில நூல்

புதுடில்லி, அக். 12

இந்தியாவின் விடுதலைக்காகப் பாடுபட்ட சுபாஷ் சந்திரபோஸ் போன்ற தலைவர்களின் தியாக உணர்வை மக்கள் பெறவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி ஜானி ஜெயில்சிங் தெரிவித்தார்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோசைப் பற்றி அவரது மருமகன் டாக்டர் சிசில் போஸ் எழுதிய ஆங்கில நூலை வெளியிட்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி இவ்விதம் தெரிவித்தார். (ஒ)

## மகாராணி சீன விஜயம்

லண்டன்' அக். 12

சீனாவிற்கு ஆறுநாட்கள் விஜயம் மேற்கொண்டு பிரிட்டனின் இரண்டாவது எலிசபெத் மகாராணி நேற்று அங்கு புறப்பட்டார்.

பிரிட்டிஷ் முடியாட்சி தலைவர் ஒருவர் சீனாவிற்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயமாக இது அமையும்.

சீனாவில் முக்கியமான இடங்களைப் பார்வையிடவுள்ள மகாராணியார் பின்னர் கொங்ஹொங் செல்வார். (ஒ)

## விமான தடைத் தீர்மானம்

ஒட்டாவா. அக். 12

தென் ஆபிரிக்காவுடனான விமானப் போக்குவரத்துகள் மீது தடை விதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து நிறுவனம் இதனை அறிவித்தது.

பிரிட்டோரியாவுடன் இருதரப்பு விமான சேவைகளையும் ரத்து செய்யுமாறோ அல்லது தடை செய்யுமாறோ 156 உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது. (ஒ)

## பிரிட்டன் வெளியேற்றியது

'அபுனிடவுண்' பயங்கரவாதக் குழுவினருடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் ஆறு பேரை பிரிட்டனை விட்டு வெளியேறுமாறு பிரிட்டிஷ் உள்நாட்டு அமைச்சு கோரியுள்ளது.

இவர்களில் நால்வர் ஜோர்தானையும் ஒருவர் டுனிஷியாவையும் மற்றவர் இலங்கையைச் சேர்ந்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இலங்கையர் எற்கனவே நாட்டை விட்டு அகன்று விட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## ஹர்த்தால் அனுஷ்டிக்க கோரிக்கை

டாக்கா, அக். 12

பங்களாதேஷில் புதன்கிழமை நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தல்களையொட்டி எதிர்க்கட்சிக் கூட்டணிகள்அனைத்தையும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கோரியுள்ளன.

ராணுவ சட்டம் அகற்றப்பட வேண்டும். ஜனநாயகம் மீட்கப்பட வேண்டும் என்று கோரி தமது செயற்திட்டங்களை மேலும் தொடரப் போவதாகவும் அவை தெரிவித்தன. (ஒ)

## கம்யூனிஸ்டுகள் தண்டனை பெற்றனர்

ஜகார்தா, அக். 12

ஜனாதிபதி சுஹார்ட்டோ இராணுவ ஜெனரலாக பதவி புரிந்த 1965 ஆம் ஆண்டில் இந்தோனேஷியாவில் சதிப் புரட்சியில் ஈடுபட்ட 9 கம்யூனிஸ்டுக்கள் இன்று மரண தண்டனைக்கு ஆளானார்கள்.

இந்தச் சதிமுயற்சியை சீனா ஆதரித்து உதவி இருந்தது. (ஒ)

## ஆப்கான் துருப்புகள் வாபஸ்

மாஸ்கோ. அக். 12

புதன்கிழமையின் பின்னர் ஆப்கானிஸ்தானிலிருந்து ரஷ்யாவின் ஆறு முக்கிய படைபிரிவுகள் வாபஸ் பெறப்படவுள்ளன.

மாத இறுதிக்குள் இந்த வாபஸ் நடவடிக்கைகள் பூர்த்தியாகும். இந்த ஆறுபடை பிரிவுகளிலும் சுமார் 7 ஆயிரம் வீரர்கள் அடங்குவார்கள்.

ஆப்கானிஸ்தானில் மொத்தம் 115 ஆயிரம் ரஷ்ய துருப்புகள் நிலை கொன்டுள்ளன. (ஒ)

வெளி உலகில்

## விமான விபத்தில் திரேசா உயிர் தப்பினர்

டார்-சலாம், அக் 12

மத்திய தன்சானியாவில் அன்னை திரேசா விமான விபத்தொன்றில் தெய்வதீனமாக உயிர் தப்பினர்.

நோபல் சமாதானப் பரிசு பெற்றவரான அன்னை திரேசாவும் மற்றும் அவரது கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த கன்னியாஸ்திரிகளும் பயணம் செய்ய இருந்த விமானம் புறப்பட முன்னர் இயந்திரக் கோளறு காரணமாக மேலெழும்பாது ஓடு பதையை விட்டு விலகியது.

அன்னைதிரேசாவை வழி அனுப்ப வந்த பார்வையாளர் மத்தியில் ஊடுருவிய அந்த விமானம் ஐவரை பலியாக்கியது.

அன்னை திரோசாவின் கன்னியாஸ்திரி திருச்சபையைச் சேர்ந்த ஒருவரும் பலியானார். ஆனால் விமானத்தில் இருந்த எவரும் பாதிப்படையவில்லை.


டான் விஜயத்தை முடித்த பின்னர் தன் ஸானியாவின் பல பாகங்களிலும் ஆராதனைகளில் பங்குபற்றி வருகின்றார். (ஒ)

## முதலாவது டாக்டர்

நிக்கோபார், அக். 12

நிக்கோபார் தீவுகளில் முதற்தடவையாக ஒருவர் டாக்டர் பட்டம் பெற்றுள்ளளார். (ஒ)

பொய்யாமொழி



குறள் :

சுணைகொடிது யாழ்கோடு செவ்விது ஆங் கன்ன
வினைபடு பாலால் கொளல்.

பொருள் :

நேராகத் தோன்றினும் அம்பு கொடியது; வளைவுடன் தோன்றினும் யாழின் கொம்பு நன்மையானது; மக்களின் பண்புகளையும் செயல் வகையால் உணர்ந்து கொள்ளவேண்டும்.

## வலய மட்டத்தில் கல்விப் பொருட் காட்சி

### ஜனவரியில் நடைபெறும்

யாழ்ப்பாணம், அக். 13

கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்டு தற்போது வட்டார ரீதியாக நடைபெற்று வருகின்ற; கல்விப் பொருட்காட்சி வலயங்கள் மட்டத்தில் அடுத்த வருடம் நடைபெறும்.

கல்வி வட்டாரங்கள் 3 வலயங்களாக பிரிக்கப்பட்டு இப்பொருட் காட்சி நடைபெறும்.

**வலயம் 1**

வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை. மானிப்பாய் வட்டாரங்கள் இணைந்த வலயத்திற்கான பொருட்காட்சி ஜனவரி 16ஆம் திகதி நடைபெறும்.

இவ்வலயத்திற்கு பிரதம கல்வியதிகாரி திரு. கே.கந்தசாமி தலைவராக கடமைபுரிவார்.

**வலயம் 2**

சாவகச்சேரி நல்லூர், வேலணை, புங்குடுதீவு, யாழ்பாணம் கல்வி வட்டாரங்கள் இணைந்த வலயத்திற்கான பொருட்காட்சி ஜனவரி 22ஆம் திகதி நடைபெறும்.

இவ்வாலயத்திற்கு பிரதம கல்வியதிகாரி திரு. கே. சோமசுந்தரம் தலைவராக கடமை புரிவார்.

**வலயம் 3**

கோப்பாய் உடுப்பிட்டி, பருத்தித்துறை கல்வி வட்டாரங்கள் இணைந்த வலயத்திற்கான பொருட்காட்சி ஜனவரி 30ஆம் திகதி நடைபெறும்.

இவ்வலத்திற்கு பிரதம கல்வியதிகாரி வே. தங்கராசா தலைவராக கடமை புரிந்தார். (உ-5)

## பால் மா விநியோகம்

கிளிநொச்சி பிரசைகள் குழு கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சுமார் 46 கிராம அபிவிருத்திச் சங்கங்களின் கீழ் கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆகியோருக்கு சத்துணவு விநியோகத்தை மேற்கொண்டுள்ளது.

றெட்பானா நிறுவனத்தின் உதவியுடன் வழங்கப்படும் இந்தச் சத்துணவுப் பால் மா விநியோகத் திட்டத்தின் கீழ் சுமார் 900 பேருக்கு வழங்கப்படுகிறது. (உ67)

## பாடசாலை வளவுக்குள் நுழைந்த சிப்பாய்கள்

முள்ளியவளை, அக். 13

உதைபந்தாட்டப் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென பற்றை மறைவுக்கூடாக வித்தியாலய வளவுக்குள் ஆயுதப் படையினர் வந்தனர்.

இதனால் மாணவர்கள் பதற்றமடைந்தனர். ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் இச் சம்பவம் நடந்தது.

இருவாரங்களுக்கு முன் இப்பகுதியில் நடந்த அசம்பாவிதத்தால் இப் பாடசாலை மூடப்பட்டு கடந்தவாரமே மீண்டும் திறக்கப்பட்டது.

திடீர்ப் பிரவேசம் செய்த ஆயுதப்படையினர் ஆஸ்பத்திரி வளவுக்கூடாக வீதியோரம் வந்து பின்பு தமது முகாமுக்குச் சென்றனர். (இ-93)

## முல்லைத்தீவில் திருமலை அகதிகளுக்கு 2வாரங்களுக்கே பங்கீட்டுணவு

முள்ளியவளை, அக். 13

திருகோணமலைமாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து முல்லைத்தீவில் வந்து தங்கியிருக்கும் அகதிகளுக்கு இரண்டு வாரங்களுக்கு மட்டுமே பங்கீட்டு உணவு வழங்கப்படும். இப்படி புனர்வாழ்வு அமைச்சு அறிவித்திருக்கிறது.

மேற்படி அகதிகள் திருகோணமலை மாவட்டத்தில் பாதுகாப்பாக வாழமுடியாது என்பதால் அவர்கள் தொடர்ந்தும் முல்லைத்தீவில் தங்கியிருக்கவேண்டிய நிலை இருப்பதாலும், அவர்களுக்குரிய உணவு முத்திரைகளைத் தொடர்ந்து வழங்கும்படியும் புனர்வாழ்வு அமைச்சுக்கு முல்லைத்தீவுப் பிரசைகள் குழு கோரிக்கை விடுத்திருக்கிறது. (உ-93)

## குளங்களை ஆழமாக்க வலிவடக்கில் முயற்சி

காங்கேசன்துறை' அக். 13

வலிவடக்குப் பகுதியில் மழைநீர் வீணாவதைத் தடுத்து அதனை விவசாயத்திற்கு உபயோகப்படுத்த குளங்களை ஆழமாக்கும்பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மாவை லயன்ஸ் கழகம் ஊற்று நிறுவனத்தின் உதவியுடன் இப் பணியை மேற்கொண்டுள்ளது.

முதற்கட்டமாக இளவாலை சித்திரமேழிப் பகுதியில் உள்ள பண்டவனைக்குளம், பனை கூத்தியவத்தைக்குளம் ஆகியவற்றை ஆழமாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. (உ 68)

## நவராத்திரி விழா

மன்னார். அக். 13

மன்னார் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரி விழா கடந்த ஒன்பது நாட்களாக வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டது.

ஒன்பது நாட்களிலும் சித்தி விநயகர் கல்லூரி ஆசிரியை செல்வி சியாமளாவின் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. இறுதி நாள் விஜயதசமி விழாவும் கொண்டாடப் பட்டது.

## தேர் திருவிழா

வேலணை, அக். 13

வேலணை பெருங்குளம் முத்து மாரியம்மன் ஆலய தேர்த் திருவிழா சிறப்பாக நடைபெற்லது. அடியார்கள் வழமையிலும் பார்க்க இவ் வருடம் பெரும் எண்ணிக்கையில் பங்குபற்றினர். (உ-167)

## சிங்கள வர்த்தகர் கடத்தப்பட்டார்

வவுனியா, அக். 13

வவுனியா பஸ்நிலையத்தில் வைத்து ரம்பண்டா என்ற சிங்கள வர்த்தகர் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த வியாழன் பகல் இச் சம்பவம் இடம்பெற்றது. (இ - ஜ - எ)

## பாதிப்புற்றோருக்கு உதவி

கிளிநொச்சி, அக். 13

கிளிநொச்சி அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டு இராமநாதபுரம், கோணவில் ஆகிய முகாம்களில் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கு ரூபா இருபத்தையாயிரம் பெறுமதியான பங்கீட்டு உணவுப் பொருள்களை கத்தோலிக்க திருச்சபையின் மனித முன்னேற்ற நடுநிலையம் விநியோகித்தது.

இராமநாதபுரத்தில் சுமார் நாற்பது குடும்பங்களைச் சேர்ந்த 150 பேருக்கும்—

கோணவில் அகதிமுகாமில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 150 பேருக்கும் இப்பங்கீட்டு உணவு வழங்கப்பட்டதுடன் —

ஆரோக்கியபுரத்தில் சுமார் 300 பேரினை கடந்த ஜூன் மாதம் முதல் மனித முன்னேற்ற நலநிலையம் பராமரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ-76)

## சம்பளம் மீளாய்வு

கொழும்பு, அக். 13

பயிர்ச்செய்கை அதிகாரிகளுக்கான சம்பளம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

புதிய சம்பள விகிதத்தை கடந்த புதன்கிழமை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது.

இது சம்பந்தமான சம்பள மீளாய்வு ஆணைக்குழுவின் அறிக்கையை அமைச்சர் காமினி ஜயசூரியா அமைச்சரவைக்குச் சமர்ப்பித்து இருந்தார்.

புதிய சம்பள விகிதம் வருமாறு:

ரூபா 7,740-14X120 . 1X180 - ரூபா9,600- (உ - எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மிகவும் குறைந்த செலவில்
உங்கள் புகைப்பட நெகட்டிவிலிருந்து
இதற்கென தருவிக்கப்பட்ட
கருவிமூலம் வீடியோ படங்களாக
மாற்றித் தருகின்றோம்.
விபரங்கட்கு:
எவர் விஷன்
21A, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

13 - 10 - 1986 திங்கட்கிழமை

உங்கள் மங்கள வைபவங்களை நவீன,
கம்யூட்டர் முறையில் இயங்கும் வீடியோக்
கமராமூலம் இத்துறையில் நீண்டகால அனு
பவம் பெற்றவர்களினால் படமாக்க தொட
ர்பு கொள்ளவும்.
எவர் விஷன்
21A, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்.

## வித்தாரம்

என்ன முரளியார்! நவராத்திரி பூசை எல்லாம் முடிஞ்சுதுபோலை. கொஞ்சம் ஆறுதலாய் இருக்கிறீராக்கும். அதாலை தான் காண முடிஞ்சுது எண்டு நினைக்கிறன். அப்பிடித் தானே......?

அந்தக் காலத்திலை நவராத்திரி பூசை எண்டால் ஊர் எல்லாம் கொண்டாட்டம் தான். கும்பம் வைச்சு, விரதம் பிடிச்சு, அன்னை வழிபாடு செய்யாத வீடுகளை விரல்விட்டு எண்ணலாம் எண்ட நிலை. வீடுகளிலை என்ன, பள்ளிக்கூடங்களிலை என்ன, சங்கீதம், கலை எண்டு ஒரே அமர்க்களப்படுமே...

யாழ்ப்பாணத்திலை அப்படிக் கொண்டாடிப் பழகினவை கொழும்புக்குப் போனதும் அரசாங்கத் திணைக்களங்களிலை மன்றங்களை உண்டாக்கி நவராத்திரி விழாக்களை நடத்திச்சினம். கொழும்பிலை நவராத்திரிக் காலம் எண்டால் உண்மையிலை கலைவிழாக் காலம் தான். பரத நாட்டியம், சங்கீதக் கச்சேரி எண்டு திணைக்கள இந்து மன்றங்களும் தமிழ் மன்றங்களும் போட்டி போட்டுக்கொண்டு நடத்துவினம். தலைநகரத்திலை தமிழ்க்கலை மணக்கும். களை சொட்டும். அதுவும் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனைப் பக்கங்களைச் சொல்லத் தேவையில்லை. 83 க்குப் பிறகு அந்த நிலை அங்கை இல்லை.

யாழ்ப்பாணத்திலை யாவது அப்பிடி ஒரு கலை மணத்தை நுகர முடியாமல் இருக்குது. இஞ்சை இந்த விழுவார் கள் 'ஷெல்' அடியாலை சனத்தைக் கலக்குகினம்; கலக்கினம். சனியனுக்கு நிம்மதியாஎள் எண்ணை எரிக்கக் கூடச் சனத்தை விடுகினம் இல்லையே..!

ஆயுத பூசை நாளிலை முகாம்களிலை இருக்கிற ஆயுதங்களுக்குப் பூசை செய்தவை மாதிரி எல்லே அடுத்துத் தொடர்ந்து ஷெல் அடிச்சு ஆஸ்பத்திரியையும் உடைச்சிட்டினம்! பாத்தியே..! புது ஆயுதங்களைச் சோதிச்சுப் பாக்கினமோ ஆருக்குத் தெரியும்.

ஆயுதக் கொள்வனவிலை பல பெரிய புள்ளிகள் கொமிஷன் அடியாமலே இருப்பினம். சக்கச்சக்கமா அடிப்பினம். அபிவிருத்தி வேலையளிலை கோடிக்கணக்கா அடிக்கிறவை. ஆயுத விஷயத்திலை எண்டாப்போலை பின்னுக்கே நிப்பினம்.

உந்த விஷயத்திலை இந்தியாவிலை இருந்து இஞ்சை அடிக்கடி வந்து போன ஒரு பிரமுகர் கொழும்பிலை அமைதியாக ஆலோசிக்கிற ஒரு பெரிய புள்ளியோடை கூட்டாம் எண்டு சொல்லுகினம். அந்த இந்தியப் பிரமுகர் பெரிய பதவி வகிச்சவர். ராஜீவ் விரும்பாததாலை, 'எக்ஸ்டென்ஷன்' குடுக்காததாலை இப்ப ஒதுங்கிப் போய் இருக்கிறார். எண்டாலும் சர்வதேச மோசடிச் சாமி ஒருவரோடு நெருங்கிய நட்புள்ள அந்தப் பிரமுகருக்கும் கொழும்பிலை உள்ள ஆலோசனைப் புள்ளிக்கும் ஆயுதக் கொமிஷன் விஷயத்திலை நெருங்கியஒட்டுறவாம். அந்த வேலை இன்னும் தொடர்ந்து நடக்குதாம் எண்டு புதுடில்லியிலை இருந்து கொண்டோடிக்கு ஒரு தகவல்!

வாங்கின ஆயுதங்களைச் சக்குப் பிடிக்காமல் பாவிச்சுத் தீர்த்தா தானே புதிசா வாங்கலாம். கொமிஷனும் வரும்.

அவைக்குக் கொமிஷன் வாறதுக்காகத் தமிழ்ச்சனம் சாக வேணும். பாத்தியே!

— கொண்டோடி

# பருத்தித் துறையில் சனியன்று பீரங்கி, ஷெல் தாக்குதல்கள்

பருத்தித்துறை அக். 13

பருத்தித்துறைப் பகுதியில் சனியன்று பீரங்கி, ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பருத்தித்துறை இராணுவ பொலீஸ் கூட்டு முகாமிலிருந்து சனிக்கிழமை காலை 11-00மணியளவில் ஆலடிப் பகுதியால் வெளியேறிய நூற்றுக்கணக்கான சிப்பாய்களை நோக்கிப் போராளிகள் கைக்குண்டுகளை வீசியும் நவீனரக மோட்டார் ஷெல் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

இதனால் இராணுவத்தினர் பலத்த இழப்புக்களுடன் முகாமிற்குத் திரும்பிச் சென்றனர்.

பின்பு இராணுவத்தினர் முகாமிலிருந்து ஆத்தியடி, தம்பசெட்டிப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

மாலையில் கடற்கரையோரப் பகுதிகளில் கப்பலில் இருந்து கடற்படையினர் பீரங்கித் தாக்குதலையும் நடத்தினர்.

ஷெல்களில் ஒன்று புலோலி மேற்கு பொதிகை சனசமூக நிலையத்தில் விழுந்து வெடித்தது. இதனால் சனசமூக நிலையம் பலத்த சேதத்துக்குள்ளாகியது.

இன்னொரு ஷெல் புலோலி மேற்குப் பழைய விதானையார் வீதியில்விழுந்துவெடித்ததினால் தம்பசெட்டியைச் சேர்ந்த திரு. சங்கரப்பிள்ளை நடராசா (வயது 68) என்பவர் காயமுற்றார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஷெல் தாக்குதல்களின்போது பல வீடுகளும் மரங்களும் சேதமுற்றன. (உ.118)

## அகதிகளுடன் வந்த இரண்டு படகுகள் கடற்படையிடம் சிக்கின

திருகோணமலை, அக். 13

திருகோணமலை, குச்சவெளிக் கிராமத்தில் இருந்து முல்லைத்தீவு நோக்கி 150 பேர்களுடன் சென்றுகொண்டிருந்த 2 படகுகளை இலங்கைக் கடற்படையினர் சனிக்கிழமை காலை கைப்பற்றினர்.

இரண்டு படகு ளிலும் ஆண், பெண், குழந்தைகளுட்பட 150 பேர் இருந்தனர்.

அகதிகளாகத் தாங்கள் முல்லைத்தீவு செல்வதாக அவர்கள் தெரிவித்தனர்.

படகுகளைத் திருமலைக்குக் கொண்டு சென்ற கடற்படையினர் அவர்களை விசாரணையின் பின்னர் விடுவித்தனர். (இ-எ-150)

## அதிசய பசுக்கன்று

வேலணை, அக்.13

வேலணை துறையூரி லுள்ள திரு.சரவணை ஆசிரியர் வீட்டில் உள்ள ஒரு பசு மூன்று கண்களுடனும், இரண்டு வாய்களுடனும் கூடிய ஒரு பசுக்கன்று ஒன்றை ஈன்றுள்ளது.

இந்த அதிசய பசுக்கன்று இரண்டு வாய்களினாலும் பால் குடிப்பதையும்–

பசுக்கன்று கத்தும் பொழுது இரண்டு வாய்களினாலும் ஒரே நேரத்தில் கத்துவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்த அதிசய பசுக்கன்றை பெருந்திரளான மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றார்கள். (உ-167)

## 1987 பட்ஜெட்டிலும் பாதுகாப்பு அமைச்சு முன்னுரிமை பெறும்

கொழும்பு அக். 13

1987 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் தேசிய பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டில் வெட்டு இராது.

ஏனைய சகல அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் வெட்டு இருக்கும்.

–இப்படி திறைசேரி வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்கலைக் கழகங்களுக்கான நிதி ஒதுக்கீடு மூன்றில் ஒரு பங்காக குறைக்கப்படும். புதிய திட்டங்கள் எதுவும் பல்கலைக் கழகங்களினால் மேற்கொள்ளப்பட மாட்டா.

இப்படி பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ.எ)

### எச்சரிக்கை

மட்டக்களப்பு, அக். 13

மட்டக்களப்பில் மது விற்பனையாளர்களை விடுதலை இயக்கம் ஒன்று எச்சரிக்கை செய்துள்ளது.

இது தொடர்பாக சுவரொட்டிகள் மட்டக்களப்பில் ஒட்டப்பட்டிருக்கின்றன.

மாலை 6 மணிக்குப் பின் மது விற்பனை செய்வோருக்கு தண்டனை வழங்கப்படுமென அந்தச் சுவரொட்டியில் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. (உ-21)

## சிங்கப்பூரில் இலங்கையருக்கு மீண்டும் தொழில் வாய்ப்பு

சிங்கப்பூர், அக். 12

இலங்கையருக்கு மீண்டும் தொழில் வாய்ப்பை வழங்கும் நாடாக சிங்கப்பூர் மாறுகிறது.

சிங்கப்பூரில் கட்டட நிர்மாண வேலைகளும் கைத்தொழில் அபிவிருத்தி வேலைகளும் அதிகரித்து வருகின்றன.

உள்ளூர் தொழிலாளர்களினால் இதற்கு ஈடுகொடுக்க முடியாததினால் தான் வெளிநாட்டுத் தொழிலாளர்களை திரட்டும் வேலையில் சிங்கப்பூர் ஈடுபட்டுள்ளது.

கட்டட நிர்மாண, தொழில் நுட்பத் தொழிலாளர்களுக்கே அதிக கிராக்கி இருக்கிறது.

சிங்கப்பூர் வாசிகள் இவ்வேலைகளை விரும்புகிறார்கள் இல்லை.

வீட்டுப் பணிப்பெண்களுக்கும் தொழில் ஏஜன்ஸிகள் இலங்கையையே நாடியுள்ளன.

சிங்கப்பூர் பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களாகப்பணிபுரியவிரும்புகிறார்கள் இல்லை.

பிலிப்பீன்ஸ் நாட்டுப் பெண்களுக்கு மாதம் 225 அமெரிக்க டாலர் சம்பளம் கொடுக்க வேண்டும்.

ஆனால் இலங்கைப் பெண்களுக்கு 180 அமெரிக்க டாலர் மாதம் கொடுத்தால் போதுமாம். இதனால் இலங்கைப் பெண்களுக்கே சிங்கப்பூரில் கிராக்கி அதிகம் என்று தெரிகிறது. (உ)-எ

## 1, 800 பேர் மரணம்

சான்சல்வடோர், அக். 12

எல்சல்வடோரில் இடம்பெற்ற பயங்கர பூமி அதிர்ச்சி காரணமாக இறந்தோர் எண்ணிக்கை 1, 800 ஆக அதிகரித்துள்ளது.

சான் சல்வடோர் பகுதியில் பூமியதிர்ச்சி தொடர்ந்து நிகழ்ந்து வருவதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ-எ)


## தமிழ் பயணிகளிடம் கொள்ளை

கொழும்பு, அக். 13

பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான வான் ஒன்றில் கொழும்பில் இருந்து அனுராதபுரம் வந்தவர்களின் உடைமைகள் தலாவ என்னுமிடத்தில் வைத்து கொள்ளையிடப்பட்டன.

வெள்ளிக்கிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

தமிழ்ப் பயணிகள் இவ்வானில் வந்து பின்னர் யாழ் நோக்கிப் பயணமாவது வழக்கம். (இ-எ-ஐ)



## மருத்துவபீட புதிய கட்டடம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கென நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய கட்டடத்தின் தோற்றம். நிர்மாண வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்த மனோகரன் வெற்றிவேல் நிறுவனத்தினர் முதலாவது மாடியை ஏற்கனவே பல்கலைக்கழக நிர்வாகத்திடம் ஒப்படைத்துள்ளனர். இரண்டாவது மாடி அடுத்த மாதம் ஒப்படைக்கப்படவிருக்கிறது. (உ)

# யாழ். மாவட்டத்தில் அகதிகள் நிவாரணம் படிப்படியாக நிறுத்தம்

யாழ்ப்பாணம், அக். 13

யாழ் மாவட்டத்தில் தங்கியுள்ள அகதிகளுக்கு மாதாமாதம் நிவாரணம் வழங்குவதை படிப்படியாக நிறுத்துவதற்கு புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் திருமலை மாவட்டத்தில் சில பகுதிகளில் இருந்து வந்த அகதிகளுக்கு கடந்த மாதம் 15ஆம் திகதியுடன் நிவாரண உதவிகள் வழங்குவது நிறுத்தப்பட்டு விட்டது.

வேறு சில கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு இம் மாதம் 15ஆம் திகதியுடன் அரசின் நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டு விடும்.

எஞ்சிய திருமலைத் தமிழ் அகதிகளுக்கு அக்டோபர் கடைசி வரை அரசு நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்றும் —

தொடர்ந்து அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவது பற்றி கொழும்பில் அடுத்த மாதம் புனர்வாழ்வு அமைச்சில் நடைபெற இருக்கும் வடக்கு,கிழக்கு அரச அதிபர்கள் மாநாட்டில் முடிவு செய்யப்படும் என்றும் தெரிகின்றது.

திருமலை மாவட்டத்தில் நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது என்று கருதப்படும் தமிழ்க் கிராமங்களின் பட்டியல் ஒன்றை திருமலை அரசாங்க அதிபர் திரு. டி. எம்.ஆரியரத்ன கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடந்த அரச அதிபர்கள் கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

அதைத் தொடர்ந்தே யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள திருமலை அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதை படிப்படியாக நிறுத்தும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட இருப்பதாக தெரியவருகிறது. (அ-எ)

## ஆஸ்பத்திரியில் விஜயதசமி

யாழ்ப்பாணம், அக் 13

நவராத்திரி விஜயதசமி தினத்தை முன்னிட்டு நேற்று யாழ். ஆஸ்பத்திரி ஞானவைரவர் கோவிலில் விசேடவழிபாடுகளும், பூசைகளும் நடத்தபபட்டன.

நீர் விநியோகப் பகுதியினரின் உபய திருவிழாவான நேற்று ஈழ நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவின் 'கற்பரசியார்" என்னும் தலைப்பிலான வில்லிசையும் சிறப்பு நிகழ்ச்சியாக நடத்தப்பட்டது,

அதனைத் தொடர்ந்து சகல வார்ட்டுக்களிலும் உள்ள நோயாளர்களுக்கு பூசைப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. (உ-10)

Wyman
English Language
Institute,
SPOKEN ENGLISH
புதிய பிரிவு
ஆரம்பம்: 16-10-86
நேரம்: காலை
9 — 11 மணிவரை
(செவ்வாய், வியாழன் மட்டும்)
S. B. IYAR
12, வைமன் வீதி,
நல்லூர்.

## இனப்பிரச்சினையில் திருமலை நிலை குறித்து அமெரிக்கப் பத்திரிகையாளர்

கொழும்பு, அக். 13

திருகோணமலை, தமிழர் நிர்வாகத்தில் இருக்கக் கூடியதாகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று தமிழர் அமைப்புக்கள் விரும்புகின்றன.

தமிழரின் கையில் திருமலை போனால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று சிங்களவர் கூறுகின்றனர்.

'புரொன்ட்லைன்' சஞ்சிகையில் அமெரிக்கப் பத்திரிகையாளரான பார்பரா குரொஸிடி எழுதிய கட்டுரை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

கடைசியாக வெளிவந்த புரொன்ட்லைன் சஞ்சிகையில் இக் கட்டுரையை எழுதிய பார்பரா குரொஸிடி, 'நியூ யார்க் டைம்ஸி'ல் பணிபுரிகிறார். (உ-ஐ-எ)

## வாழைச்சே...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர். முன்னால் வந்துகொண்டிருந்த ஜீப் வண்டியின் சாரதி இதனால் நிலை தடுமாற ஜீப் மரமொன்றுடன் மோதுண்டது.

எமது வீரர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தினாலும் ஜீப் மோதியதாலும் இரண்டு பொலீஸார் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் காயங்களுக்குள்ளாகினர். (உ)

## சாம்பல்தீவு..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கிராமங்களை முற்றுகையிட்டபின்னரும் தீவிரவாதிகள் அப்பகுதிகளில் இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றனர்.

இப்பகுதிகள் முழுமையாக எம் கையில் இருக்கின்றன என்று கூறிவிட முடியாது.

இப்படி இணைப்பதிகாரி வெளிநாட்டுச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (இ-ஐ-எ)

## அடம்பனில்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வீச்சு விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன.

இதற்கு மத்தியில் எமது வீரர்கள் நடத்திய தாக்குதலில் படையினர் நெடுங்கண்டலுக்குப் பின்வாங்கினர். அங்கும் எமது வீரர்கள் சுற்றி வளைத்துத் தாக்கினர்.

இதனால் பல இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

இந்த இராணுவத்தினருக்கு உதவியளிக்க உயிலங்குளத்திலிருந்து வாகனங்களிலும் நடந்தும் வந்த இராணுவத்தினரை வழிமறித்து எமது வீரர்கள் தாக்கினர்.

இதனால் உதவி முயற்சி முறியடிக்கப்பட்டது.

இராணுவத்தினரை எப்பக்கத்தாலும் முன்னேற விடாது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

கொல்லப்பட்ட, படுகாயமடைந்த இராணு

## பிரதமர் ராஜீவ் இன்று வெளிநாடு பயணம்

புதுடில்லி, அக். 13

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் 8நாள் வெளிநாட்டுப் பயணம் இன்று ஆரம்பமாகிறது.

இந்தோனேஷியா ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு பிரதமர் ராஜீவ் காந்தி இச் சுற்றுப் பயணத்தின் போது விஜயம் செய்கிறார்.

பிரதமருடன் வெளியுறவு அமைச்சர் சிவ்சங்கர் செயலாளர் ஏ. பி. வெங்கடேஸ்வரன் ஆகியோரும் செல்கின்றனர்.

முதலில் ஜகார்த்தா செல்லும் பிரதமர், பின்னர் ஆஸ்திரேலியா செல்வார். நியூசிலாந்து, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்துவிட்டு, இம்மாதம் 20 ஆம் திகதி பிரதமர் புதுடில்லி திரும்புவார். (உ-எ)

## நான் இறப்.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மகனின் நிலைப்பாடு.

ஒரு வழக்கு விசாரணையின் முடிவில் எனது மகன் நிரபராதி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மறு வழக்கு விசாரணை நடைபெற உள்ளது.

என்னை மகன் வந்து பார்த்து சில நிமிட நேரம் படுக்கைக்கு அருகில் அமர்ந்து ஆறுதல்தர ஒரு வாய்ப்புத் தாருங்கள்.

– இவ்வாறு வண. பிதா. சிங்கராயரின் தாயார் தனது உருக்கமான கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இக் கடிதத்தின் பிரதி தேசிய பந்தோபஸ்து அமைச்சருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (உ-9)

## கடிகாரத்துக்கு..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சுவர் ஒன்றில் உள்ள சுவர்க் கடிகாரம் கடந்த சனிக்கிழமை மாலையில் இருந்து 5.58 ஐக் காட்டியபடியே இருக்கிறது.

சுவர்க்கடிகாரம் உள்ள சுவர் ஷெல் தாக்குதலினால் தெய்வாதீனமாக இடிந்து விழவில்லை. (உ-எ)

வத்தினரை நேற்று மாலை எமது தாக்குதல்களுக்கு மத்தியில் ஹெலி ஒன்று ஏற்றிச்சென்றது. தாக்குதல் தொடர்கிறது.

படையினர் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-உ)

## ஆகுதி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், அக். 13

சோமகாந்தன் எழுதிய 'ஆகுதி' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா நல்லூர் இந்து விடுதியில் எதிர்வரும் ஞாயிறு காலை நடைபெறும்.

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் தலைமை வகிப்பார். ரெலிகுளோப் அதிபர் திரு. ம. சிவராசா மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பார்.

பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட், யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க பொதுச் செயலாளர் திரு. பிரேம்ஜி ஞானசுந்தரன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

வெளியீட்டுரையை திரு. இ. முருகையன் நிகழ்த்துவார். (உ-எ)

## ஒருவருக்கு காயம்

யாழ்ப்பாணம், அக். 13

யாழ். கோட்டை முகாமில் இருந்து சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஆர். நவரட்ணராசா (49 வயது) என்பவர் நேற்றுக் காயமடைந்தார்.

கே. கே. எஸ். வீதி ஊடாக சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது கோட்டையில் இருந்து திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும்–

இதனால் தனக்கு காலில் காயம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (உ-10)

## இளைஞர் பலி

பருத்தித்துறை, அக். 13

பருத்தித்துறை இராணுவ பொலீஸ் கூட்டு முகாம் பகுதியில் இருந்து வந்த துப்பாக்கி வேட்டுக்கு இளைஞர் ஒருவர் பலியானார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை போராளிகளின் அரணுக்கு அருகே சென்ற சுப்பர்மடத்தைச் சேர்ந்த திரு. எஸ். செபஸ்தியாம்பிள்ளை (வயது 24) என்ற இளைஞரே இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுக்குப் பலியானார்.

இவர் திருமணமாகி ஆறுமாதங்களே ஆகின்றன. (உ-118)

## தேவை

பத்திரிகை அலுவலகத்தில் பணியாற்றுவதற்கு அனுபவம் உள்ள ஒப்புநோக்குநர்கள் (Proof Readers) தேவை.

மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

இரவு நேரங்களில் கடமையாற்றக் கூடிய சுகதேகிகளாக இருக்க வேண்டும்.

யாழ்ப்பாண மாநகர சபைப் பகுதியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உரிய சுய விவரங்களுடன் நற்சான்று பகரக்கூடிய இருவரின் பெயர்களைக் குறிப்பிட்டு, 20-10-1986 திங்கட்கிழமைக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

விளம்பரதாரர்,
மே/பா உதயன்
த. பெ. இல: 23
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம். மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை, 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது
வெளியீட்டு திகதி:- 13 — 10 — 1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ60N86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org